தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2020 மீனம் (31-3-1989) ஓர் உருபா (இதழ் எண்: 118)

தமிழகக் கட்சித் தொண்டர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

இந்தியாவின் ஒரு மாநிலமாகத் தமிழகம் இருக்கும் வரையில், தமிழினத்துக்கான நீடித்த, நிலைத்த பயன்களை மாநில அரசு செய்து விட முடியாது.

கோடிக் கணக்கில் தமிழனின் வரிப் பணத்தை வாரிக் கொண்டு போகிறது தில்லியரசு

ஆனால் பெரும் பகுதியை வடஇந்திய மாநிலங்களுக்கே செலவிட்டு விட்டுச் சிறிய பகுதியையே நமக்குக் கொடுக்கிறது.

இந்நிலை மாற ஒரே வழி தமிழக விடுதலைதான்!

தஞ்சை. நலங்கிள்ளி -அமெரிக்கா.

தி.மு.க., அ,தி.மு,க (சானகி), அ.தி.மு.க (செயலலிதா), அ.தி.மு.க. (நெடுஞ்செழியன்), தமிழ்த்தேசியக்கட்சி ஆகிய அரசியற் கட்சிகளையே தமிழ்க்கட்சிகள் என்று நாம் இங்குக் குறிப்பிடுகிறோம். பேராயக் கட்சி, சனதா, சனதல் ஆகிய கட்சிகளை நாம் வடஇந்தியக் கட்சிகள் எனக் குறிப்பிடலாம். இவ் வட இந்தியக் கட்சிகளின் **உண்மையான** தலைமை எப்போதும் வடஇந்தியாவிலேயே இருக்கும். வடஇந்தியக் கட்சிகள் எப்போதும் வடஇந்தியரின் (குறிப்பாக இந்தி பேசும் வடஇந்தியரின்) நலனையே முதன்மையாகக் கருதுகின்றன; கருதும். மாறாக, தமிழ்க் கட்சிகளின் தலைமை தமிழகத்திலேயே இருக்கிறது. அக் கட்சிகளின் தலைவர்கள் பலரும், தொண்டர்கள் பலரும் தமிழ் நெஞ்சினரேயாம். தமிழின, தமிழக,

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

ஒரு புரட்சி மடல்!

புரட்சிக்காரனுக்குத் தோல்வியும் வெற்றிதான்!

தமிழின மக்களுக்காகப் பாடுபடும் திரு. பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு, உ. த. மு. க. கொள்கைக்காக உயிரையும் கொடுக்கத் தயங்காத அன்பு எழுதும் அன்பு மடல்.

கொஞ்சும் தமிழ்ப்பாடி தமிழ் மக்களைக் காக்கும் பெரும் புலவ! நீங்கள் எழுதும் தங்க இதழ்களாகிய **தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு** ஆகியவற்றை நிறுத்தக் கூடாது என்று கூறவோ, கட்டளையிடவோ, பக்கம், பக்கமாக மடல் எழுதவோ முன்வரவில்லை. ஏன் என்றால் நீங்கள் நன்கு சிந்தித்துத்தான் இம்முடிவுக்கு வந்துள்ளீர்கள். இப்பிஞ்சு உள்ளம் தெரிவிப்பது என்னவென்றால், தலைவர் **பொழிலன்** அவர்களின் செயல் நடைமுறையைப் பின்பற்றித் தமிழக மக்களுக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடுக்க எந்நேரமும் அணியமாக உள்ளேன். இதற்காகக் கருவி ஏந்த வேண்டும் என்றாலும் அதற்கும் அஞ்சவில்லை. புரட்சிக்காரனுக்குக் கொள்கையே முதன்மையானது. கொள்கையின் குறிக்கோள் வெற்றியாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் தோல்வியும் ஒரு புரட்சிக்காரனுக்கு வெற்றி தான்! நான் நன்கு சிந்தித்து வெகு நாள்களுக்குப் பிறகு சிறந்த முடிவாக எடுத்துள்ளேன், நான் தமிழ் மக்களுக்காக வாழ வேண்டும் என்று.எனது இளம் அகவை உணர்வு இது.

நான் உ.த. மு. க. கொள்கை என்ற ஏணியை இப்பொழுதுதான் பார்த்திருக்கிறேன். இதற்காக மன்னிக்கவும். இந்த ஏணியில் நான் புரட்சி என்ற பாதத்தை எடுத்து வைத்து ஏறிச்செல்ல வழிகாட்ட வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். நான் எந்தத் தன்னலமும் பார்த்து முடிவுக்கு வரவில்லை. நான் உங்களைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும் என்ற உணர்வுகள் துடிக்கின்றன. விரைவில் உங்களைப் பார்க்க இசைவு தர வேண்டும் எனக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். விடுதலைப் புலிகளின் தாகம், தமிழீழத்தாயகம். புலிகளின் தாகம் நிறைவு பெற என் உள்ளம் வாழ்த்துகிறது.

—அன்பு, சென்னை-78.

நாட்டு விடுதலைக்கு என ஒருவர் இருவர் சிறைப்பட்டால் போதுமா? ஆயிரக்கணக்கானவர் அன்றே சிறை செல்ல முன் வர வேண்டும்!

வீரனைச் சந்தித்தேன்!

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய தமிழறிஞர் இன உணர்வின் காவலர் பாவலரேறு, பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களுக்கு வணக்கம். 19-3-89 அன்று மதுரை நடுவண் சிறைக்குச் சென்று, தமிழர் உரிமை காத்திடப் போராடும் மாவீரன் பொழிலனைக் கண்டேன். மலர்ந்த முகம்; மாவீரனின் பார்வை; கொஞ்சமும் வளையாத மன உறுதி, வீரத் தமிழனின் மொத்த உருவமாய்த் திகழும் அந்தத் தமிழனைக் கண்டு களித்தேன். நெஞ்சம் அழுதாலும், மனம் துடித்து வாடினாலும், பகைவரின் கால் நக்கிப் பிழைக்கத் துடிக்கும் மக்கள் கூட்டத்தில் இப்படியொரு வீரத்திருமகன் இருப்பதைக் கண்டு பூரிப்படைந்தேன், பொழிலின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது! எனினும் அந்த இளைஞனின் நெஞ்சம் எத்தனை எண்ணக் கோட்டைகளைக் கட்டுகின்றதோ? இனஉணர்வு, மொழி உணர்வு என்று மேடையிலும் செய்தித் தாளிலும் எழுதியும் பேசியும் மக்கள் மன்றத்தில் இடம் பிடித்தோர் நடத்தும் தமிழ் நாட்டு அரசாவது இந்தச் சிக்கலில் சற்று தளர்ந்து வருமா? விடுதலை தருமா? இப்படிப் பல்வேறு நினைவுகளைப் பொழிலுடன் பகிர்ந்து கொண்டு திரும்பி வந்தேன்!

பொழிலைப் பார்ப்பதாகத் தங்களுக்கு செப்டம்பர் மாதம் எழுதியிருந்தேன்; இயலவில்லை. இடையில் பல்வேறு பணிகள். ஐயா, அம்மா மற்றும் தென்மொழியில் பணி புரிவோர் அனைவருக்கும் அருள் வள்ளல் இயேசுவின் பேரருள் காத்து வழி நடத்திட என் இறை வேண்டல்களில் இடம் உண்டு. தமிழரெல்லாம் வாழ்க! தமிழர் ஒன்றுபடுக! வணக்கம்.

ஐ. து. பாபு மாசிலாமணி,
மதுரை-10.

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உள்ள தமிழ் நாட்டுப் போராளிகள்!

மதுரை நடுவண் சிறையில் மே-88 முதல்

மா. பொழிலன்
த. முகிலன்
அறிவழகன்.

கோவைச் சிறையில்,

பாண்டியன்
சுப்பிரமணியன்
நாராயணன்

Scanned with CamScanner

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மொழியின் நலம் அவர் தம் உள்ளத்தே ஆழ்ந்து படிந்துள்ளதை யாரும் மறுத்திடல் முடியாது. தமிழ்க் கட்சிகள் (தி.மு.க., அ.தி.மு.க.) கடந்த 20 ஆண்டுக் காலமாகத் தமிழக மாநில ஆட்சியைக் கைக் கொண்டிருந்த காலத்தில், நாம் விரும்புகின்ற அளவு இந்தி எதிர்ப்பு, ஈழ விடுதலை ஆகிய செயல்களில் முழு முனைப்புக் காட்டா விட்டாலும், இவ்வினைகளில் ஓரளவு ஈடுபட்டதுடன், வேறு வகைகளிலும் தமிழ் நலங் கருதும் செயல்கள் பல செய்து முடித்தன. ஆனால் **இந்தியாவின் ஒரு மாநிலமாகத் தமிழகம் இருக்கும் வரையிலும், தமிழினத்துக்கான நீடித்த, நிலைத்த பயன்களைதையும் தமிழக மாநில அரசு செய்து விட முடியாது**, இதற்காகத் தமிழ் நெஞ்சங்கொண்ட முதலமைச்சர்களான அண்ணாத்துரை, கருணாநிதி, இராமச்சந்திரன் ஆகியோரைக் குறை கூற முடியாது. தமிழக மாநில முதலமைச்சர்களும், அவர்களமைக்கும் மாநில அரசும் வடஇந்தியரின் தில்லியரசுக்குக் கட்டுப்பட்டே நடந்து கொள்ள வேண்டியது தேவையாகிறது. இந்தி எதிர்ப்பு, ஈழ விடுதலை, மாநிலத் தன்னாட்சி, தமிழகத்தின் தொழிலியல் முன்னேற்றம், தமிழ் இளையோரின் கல்வி முன்னேற்றம், தமிழகத்தின் வேளாண்மைப் பெருக்கம், தமிழ் மக்களின் வாழ்க்கை வசதி முன்னேற்றம் ஆகியன குறித்துத் தமிழக முதலமைச்சர்கள் எத்துணைதான் வாய் கிழியக் கத்தினாலும், வடஇந்தியரின் கையிலிருக்கின்ற தில்லியரசு அவற்றுக்குச் செவி சாய்த்ததில்லை. கோடிக் கணக்கில் தமிழனின் வரிப்பணத்தை அள்ளிக் கொண்டு போகின்ற தில்லியரசு, அவற்றில் பெரும்பான்மையான பகுதியை வடஇந்திய மாநிலங்களுக்குக் கொடுத்து விட்டு, ஏதோ ஒரு சிறிய பகுதியைத் தமிழக அரசுக்குக் கொடுக்கிறது. வெள்ளைக்காரன் இந்தியத் துணைக் கண்டத்தை விட்டு வெளியேறி நாற்பதாண்டுகட்கு மேலாகிறது. இந்த நாற்பதாண்டுகளில் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய வடஇந்திய மாநில மக்களின் வாழ்க்கை வசதிகள் (standard-of living) உயர்ந்திருப்பதையும், அதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது **தமிழக மக்களின் வாழ்க்கை வசதிகள்** (standard of living) **குறைந்திருப்பதையும்** யாரும் மறுத்து விடவோ, மறைத்து விடவோ முடியாது. இந்நிலை காலங்காலமாகத் தொடரத்தான் செய்யும். இந்நிலை மாற **ஒரே வழி தமிழக விடுதலைதான்.** தமிழகம் விடுதலை பெற்றால், தமிழனின் வரிப்பணம் முழுக்க முழுக்கத் தமிழ் மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படும். தமிழ் மக்களின் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். தமிழக உழைப்பாளிகளின் ஊதியம் உயரும். தமிழகத்தின் வேளாண்மை பெருகும். விலையளவுகள் குறையும். தமிழக வணிகர்கள், தொழிலுரிமையாளர்கள் பொருள் நிலை பல்கும். இதனைத் தமிழ்க்கட்சிகளின் தொண்டர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் பெரும்பான்மையோரின் நெஞ்சங்களிலும் தமிழக விடுதலையுணர்வு ஆழப்புதைந்து கிடக்கிறது. ஆனால், அதை **வெளிப்படையாகச் சொல்ல முடியாத** ஒரு நிலையைத் தில்லியரசு உருவாக்கியுள்ளது. எந்தவோர் அரசியல் கட்சி தமிழக விடுதலை வேண்டுமென்று சொன்னாலும், அக்கட்சி தேர்தலில் போட்டியிட முடியாது என்று சட்டமியற்றியுள்ளது வடஇந்திய அரசு. இந்நிலையைத் தமிழகக்கட்சிகளின் தொண்டர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தமிழ்க் கட்சிகளின் தொண்டர்கள் தங்கள் பணிகளின் ஒரு சிறு பகுதியையாவது தமிழக விடுதலைக்காகப் பயன்படுத்த வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். தமிழக விடுதலைக்கான காரணங்களைத் தங்கள் உற்றார், சுற்றாருக்கு எடுத்துச் சொல்லலாம். அத்துடன், தமிழக விலைதலைக்காகப் பாடுபடும் இயக்கங்களுக்குப் பொருளவிலோ, செயலளவிலோ, வேறு எவ்வாற்றானோ உறுதுணை நிற்கலாம், அவ்வியக்கங்களின் வினைப்பாடுகளில் தாமும் ஈடுபடலாம்.

நம் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் வடஇந்தியருக்கு அடிமைகளாக வாழ்வார்களா, அல்லது முழு உரிமை கொண்ட தமிழ்க் குடிமக்களாக வாழ்வார்களா என்பது நம்மையே பொறுத்திருக்கிறது.

முயற்சி திருவினையாக்கும்!
வெல்க தமிழினம்!

இனங்காப்பதில் இருவரும் ஒன்றுதான்!

நடந்த தேர்தலின் தமிழக முடிவுகள் தெரிந்து தி.மு.க. ஆட்சியைக் கைப்பற்றிய பின், இந்தியப் பார்ப்பனர்களிடையில் மிகுந்த பரபரப்புக் காணப் பெற்றது. இராசீவ் முகத்தில் ஈயாடவில்லை. அதன் விளைவாக 28-1-88 இல் அவர் குடியரசுத் தலைவர் வெங்கட்டராமனைச் சந்தித்து ஏறத்தாழ 1½ மணிநேரம் தனித்துப் பேசியிருக்கிறார். இதற்கு முன் எந்தச் சூழலிலும் இவ்வளவு நேரம் இருவரும் தனித்துப் பேசியதில்லை. வெங்கட்டராமன் அரசியல் உருத்திராக்கப் பூனை. அவர்கள் இருவரின் பேச்சும் தமிழகத் தேர்தல் முடிவுகளைப் பற்றியும், அதனால் நேரும் பிற்கால விளைவுகளைப் பற்றியுந்தாம் இருந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

பறம்பை அறிவனின் அரசியல் குறிப்புகள்!

1. ஊர்வலம் – ஆர்ப்பாட்ட அரசியல்!

13000 பேருந்து, சரக்குந்துகளில் தொண்டர்கள் சென்னைக்குத் திரண்டதாக இந்திரா பேராயக் கட்சிப் பேரணி பற்றி நாளேடுகள் கூறின. (29-11-88). தேர்தல் வரும் முன் அனைத்துத் தேர்தல் கட்சிகளும் சென்னையை நடுவமாகக் கொண்டு தங்கள் 'வலிமைப் போட்டியில்' இறங்கக் கச்சை கட்டுவது வழக்கம்தான்...

முதலில் இ. பொ. க(மா) பேரணி, தி.மு க. ஊர்வலம், த.மு.மு. ஊர்வலம் ..என்று கட்சிகள் காட்டும் கைவரிசை கவலையளிப்பதாக உள்ளது.

உள்ளூரில் ஆயிரம் சிக்கல்கள் — கொள்ளையடிப்பதில் கூட்டு வைத்துக் கொள்ளும் கட்சிகள் இயக்கங்கள் சென்னை போன்ற பெரிய நகரங்களில் போட்டி ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடத்துகின்றன. இந்த 'விளம்பர அரசியலால்' மக்கள் மயங்கி ஒப்பமளித்து விடுவார்கள்; 'நாம் நாற்காலியில் அமரலாம்' என்று நம்புகின்றார்கள்.

கோடி கோடியாகக் கொள்ளையடிக்கப்பட்ட கறுப்புப் பணங்கள் தேர்தல் ஊர்வலத்தில் தட்டுப்பாடின்றி தண்ணீராய் — மதுவாக — கரிநெய்யாக — ஆடம்பரமாகச் செலவாகின்றன.

சென்னை 'பிழைக்க' இந்த அரசியல் வேடிக்கைகள் உதவுகின்றன.

இந்த நேரமே 'கோரிக்கைகளை எழுப்பி ஆதரவைத் திரட்ட ஏற்ற நேரம்' எனத் தொழில் முறை இயக்கங்களும் முடிவுக்கு வந்துள்ளன.

"நாம்... அமைதியாக — ஆனால் உறுதியாக இப்போலிமைகளைத் தோலுரித்துக் காட்டத் தொடர்ந்து முயல்வதும் அணி சேர்வதும் வேண்டும்" எனப் புரட்சியாளர் கருதுகின்றனர்!

2. வரலாற்றை இருட்டடிப்புச் செய்தல்!

21-ஆம் நூற்றாண்டுக்கு 'அழைத்துப் போகும்' பேராயக் கட்சி 'காமராசர் ஆட்சியை அமைப்போம் என்பதும்—

ஒரு கட்சி மற்றொரு கட்சி மீது ஏறிக்கட்டிய 'வசவுகள்' — அன்று காமராசரைத் திட்டிய தி.மு.க — அண்ணாத்துரையை இழிவு செய்த பேராயக் கட்சி-பொதுவுடைமைக் கட்சிகள், இன்று 'அண்ணா', 'காமராசர்,' 'இராசாசி' போன்ற தலைவர்களைத் தலைமேல் தூக்கி ஆடுகிறார்கள்.

நேற்றுவரை ம. கோ. இரா. (எம்.சி.ஆர்)-வைக் 'கோமாளி' என வண்ணனை செய்தவர்கள். இன்று 'அவர் பெயரில் உள்ள' எளிய மக்களின் சாய்கால ஒப்போலை(வாக்கு)ச் சீட்டுகளாக மாற்றி விடத் துடியாய்த் துடிக்கிறார்கள்.

3. உரிமைப் போராட்டம்-பிரிவினை மிரட்டல்!

நடுவண் அரசை எதிர்த்தால் பிரிவினை மிரட்டல்; 'மாநில அரசுகளை' எதிர்த்தால், 'சட்டம்-ஒழுங்கு' மிரட்டல்.

'உரிமை', கோரிக்கைகளை மக்களாட்சி நாட்டில் மறுப்பார்களோ? அப்படி மறுப்பது மக்களாட்சியாகுமா?

'தேசிய இனம்' குறித்த கேள்விகளைக் கண்டு சினப்படுகின்ற அதிகார வெறி—கொடு நெறிக் கொள்கை புதைசேற்றில்...ஒயும்!

வரலாற்றைத் 'திசை' மாற்ற நினைக்கும் போலிகளை, வரலாறு மக்கள் புரட்சிப்புயலில் தேடிப் பிடிக்க வேண்டி வரும்! அவர்கள் 'இருந்த இடம்' தெரியாமல் போக நேரும்...புதிய் நிலைமைகள் தோன்றும்...மக்கள் தலைமைகள் தோன்றும்!

4. கி.ஆ.பெ.யும் தமிழ்க்குடிமகனும்:

6-12-1988 இல் பறம்புக்குடி சவளி வணிகர் திருமண மண்டபத்தில் திரு. கி. ஆ. பெ யின் 90 ஆம் ஆண்டு விழா நடந்தது. கி. ஆ. பெ தம் உரையில் 'தமிழ், தமிழ் மருந்து, தமிழ் உணவு, காலம் உயிர்' போன்ற கருத்துரைகளை வலியுறுத்தினர்.

என்னையும் வாழ்த்துக் கூற அழைத்தனர். வாழ்த்துக் கூறினேன். அழைப்பில் 'முத்தமிழ்க் காவலர் 'டாக்டர்' எனப் போடப்பட்டிருந்தது.

"முனைவர் தமிழ்க் குடிமகன் வீட்டில் 'டாக்டர் தமிழ்க்குடிமகன்' எனத் தமிழில் எழுதப்பட்ட பலகை தொங்குகிறது" என்று தமிழன்பர் ஒருவர் கூறினார்.

"இந்த 'டாக்டர்' என்ற ஆங்கிலச் சொல்லில் என்ன 'மந்திரம்' உள்ளதோ? முனைவர் — பண்டாரகர்' என்றெழுத இந்தத் தமிழ் வீரர்களுக்கே மனம் வரவில்லையே" என ஒரு 'தமிழ்' எதிர்ப்பாளர் (இவரும் தமிழர் தாம்) பகடி-பண்ணினார்- இதனையும் 'செவிகைப்பச் சொல் பொறுக்கும்' நாகரிகம் கருதிப் பொறுத்துக் கொண்டுதானிருக்கிறேன்.

5. தமிழகத்தின் தலைநகர்!

சென்னைதான், 'தோல் தொழிலின் தலைநகரம்! எனவே, 1989 பிப்ரவரியில் அமெரிக்கத் தோல் தொழிற் கழகம் (1917 இல் உருவானது), இந்தியத் தோல் தொழிற் கண்காட்சியை நடத்தத் திட்டமிட்டுள்ளதாம்!

(தொடர்ச்சி 9 ஆம் பக்கம்)

Scanned with CamScanner

மக்களுக்காக ஆட்சியா? ஆட்சிக்காக மக்களா?

(23, 24-7-88 இல் ஈரோட்டில் நடந்த பாசிச எதிர்ப்பு மாநாட்டில் ஆசிரியர் நிகழ்த்திய சொற்பொழிவு!)

அன்பார்ந்த தோழர்களே, பெரியோர்களே, அறிஞர்களே! அனைவருக்கும் என் நெஞ்சு நிறைந்த வாழ்த்தும் வணக்கங்களும்.

காலையிலிருந்து மிகக் கவனமாக நிகழ்ச்சிகளைக் கேட்டு வருகிறீர்கள். நீங்கள் எல்லாரும் சிந்திக்கத் தெரிந்தவர்கள். இன்று நாட்டிலே என்ன நடக்கிறது என்பதை மிகவும் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் கவனித்துக் கொண்டிருக்கிற, அரசியலின் தில்லுமுல்லுகளையெல்லாம் உணர்ந்து கொள்ளக்கூடிய மக்களாக இங்குக் கூடியிருக்கிறீர்கள்.

இந்தப் பாசிச எதிர்ப்பு இயக்க மாநாடு பற்றி ஒரு சில கருத்துகளைச் சொல்ல விரும்புகின்றேன். மக்கள் நலனுக்கு எதிராக உள்ள அனைத்து அரசியல் அதிகாரங்களும் பாசிசம் என்ற சொல்லுக்குள் வரக்கூடியது. மக்களுடைய ஆட்சி என்பதன் பொருளுக்கு நேர் எதிராக உள்ள ஆட்சி எதுவோ அதுவே பாசிசம் அ'தாவது மக்களுக்கான அரசு என்ற ஆட்சி முறை போய் ஆட்சிக்காக மக்கள் என்கிற உணர்வு பெறும்படி அதிகாரிகளை, காவல் துறைகளை, படைத்துறைகளை கையிலே வைத்துக்கொண்டு எந்தெந்த வகையில் முடியுமோ, அப்படி எல்லாம் மக்களுடைய உரிமைகளை அவர்களுக்கு இல்லாமல் செய்கின்ற, நசுக்குகின்ற ஆட்சிதான் பாசிச ஆட்சி. மக்களுக்காக ஆட்சி என்பதன்றி ஆட்சிக்காக மக்கள் என்ற அதிகார நிலையை, வரம்பை எந்தெந்த வகையில் நீடித்துக்கொண்டு போகலாம் என்று அரசு கருதுகிறதோ, அந்த வழிகளிலெல்லாம் நீடித்துக் கொள்ள சட்டப்படி அதிகாரத்தை எடுத்துக் கொள்ளும் ஆட்சியைத்தான் பாசிசம் என்கிறோம். இதனைப் பற்றி எல்லாம் இன்றைக்கும் நாளைக்கும் நடக்கவிருக்கின்ற கருத்தரங்குகளிலே இன்னும் இந்திய அரசியல் தலைவர்கள் பலர் மிக விரிவாக எடுத்துச் சொல்ல இருக்கிறார்கள்.

காலையில் பேசிய மதிப்பிற்குரிய வி. ஆர். கிருட்டிணய்யர் அவர்களும், திரு. ஆனைமுத்து அவர்களும் இந்த 59-ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தைப் பற்றியும் அனைத்துக் கருப்புச் சட்டங்கள் பற்றியும் பல கருத்துகளைக் கூறி உள்ளனர். இந்த 59-ஆவது சட்டத்திருத்தத்தை பஞ்சாபில் போட்டிருக்கிறார்கள் என்பதை விட, பஞ்சாபை அடிப்படையாகக் கொண்டு போட்டிருக்கிறார்கள் என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் பஞ்சாபிலேதான் இந்த ஆட்சியை எதிர்க்கும் உணர்வு அந்த மக்களிடம் தோன்றியிருக்கிறது. எனவேதான் பஞ்சாபை எந்தெந்த வழிகளில் எல்லாம் அடக்கலாம் என்று கருதுகிறார்கள். அந்த உணர்வு வேறு மாநிலங்களில் எல்லாம் முன் கூட்டியே வராமல் தடுக்கவே இந்த 59-ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்கள்.

அ'தாவது இந்திய அரசியல் அமைப்பிலே 13-ஆவது நெறிப்படி வழங்கப்பட்டுள்ள கருத்துரிமைகள்—அ'தாவது மக்கள் தங்களுக்குத் தேவை என்று கருதும் கொள்கைகளை முன் வைக்கும் உரிமைகள், முதன் முதலிலே இந்தச் சட்டத்திருத்தத்தால் தடுக்கப்படுகின்றன. எல்லா வகையான பேச்சுரிமைகளும், எழுத்துரிமைகளும் பறிக்கப்படுகின்றன. அரசின் நடவடிக்கைகளை—அ'து என்ன நடவடிக்கையாக இருந்தாலும்சரி—கண்டிக்கக்கூடிய கருத்துகளை, எழுத்து வடிவிலோ, பேச்சு வடிவிலோ, நாடக வடிவிலோ, இசை வடிவிலோ எந்த வடிவிலும் வெளியிடக் கூடாது. மீறினால் யாராக இருந்தாலும் சரி, மிகக் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்பதுதான் அந்தச் சட்டம். தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் முதலிய யாரும் அவரவர்களுக்கு உள்ள உரிமைகளுக்காகப் போராடக்கூடாது என்று தெளிவாக அந்தச் சட்டத்திலே சொல்லப் பட்டிருக்கிறது. அப்படி அவர்கள் போராடுவார்களேயானால் அல்லது அந்த உரிமையைப் பேச்சு வடிவிலோ, எழுத்து வடிவிலோ வேறு எந்தக் கருத்து வடிவிலோ மக்களிடையே எடுத்துச் சொல்வார்களேயானால், அவர்களுடைய அலுவல்கள் பறிக்கப்படும். அவர்கள் எந்த அரசுப் பணியிலும் இருக்க முடியாது எனும் இச்சட்டத்தின் கடுமையை நீங்கள் உணர வேண்டும். அது மட்டுமன்று, அவர்களது குடியுரிமையும் பறிக்கப்படும். இந்த நிலையை அந்தச் சட்டத்தின்படி தேவையானால் மற்ற எல்லா மாநிலங்களுக்கும் விரிவு படுத்தவும் இது வழி செய்கிறது.

எல்லா அரசியல் நடைமுறைகளும் படைத்துறை, காவல்துறை இரண்டையும் வைத்துக் கொண்டு மக்களை அடக்கி ஒடுக்கவே இச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அ'தாவது எந்த ஒரு குடிமகனையும் எக்காரணமின்றியும் — இதைக் கவனிக்க வேண்டும், இன்ன காரணத்திற்காக ஒருவன் அலுவல் பறிக்கப்பட்டுள்ளது என்றால், அதை எதிர்த்து ஏனென்று கேட்க முடியாது; எந்த வழக்கு மன்றத்திலும் போய்ப் போராட முடியாது என்ற நிலையில்—அரசு தனிப்படுத்திப் படைத்துறை, காவல்துறையைக் கொண்டு சுட்டுக் கொல்லலாம். ஏன் சுட்டுத் தள்ளினீர்கள் என்று

Scanned with CamScanner

யாரும் எந்த நிலையிலும் கேட்க முடியாது. இப்படிப் பட்ட ஒரு நடைமுறைச் சட்டம்தான் 59-ஆவது சட்டத்திருத்தமாக மக்கள் மீது திணிக்கப் பட்டுள்ளது.

இந்த நாட்டிலே ஏற்கனவே மக்களுக்குத் தரப்பட்டுள்ள உரிமைகள் வெள்ளைக்காரன் காலத்தில் தரப்பட்டவைதாம். அதையும் இவர்கள் பறிக்கிறார்கள். தங்கள் வல்லதிகாரத்தை நீட்டிக்கவோ, விரிவுபடுத்திக் கொள்ளவோ அழுத்தமாக மிகைப் படுத்திக் கொள்ளவோதான் 59-ஆவது சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளனர். எனவே இந்தச் சட்டம் கடுமையான கருப்புச் சட்டம். ஏற்கனவே உள்ளதை விட மிகக் கடுமையானது.

படிப்படியாகப் பாசிச ஆட்சியை விரிவுபடுத்த, பாராளுமன்ற ஆட்சி முறையையே தொடர்ந்து நடத்த முடியாத நிலையில் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வருவதற்கான கருத்துகளை உருவாக்கி வருகிறார்கள். குடியரசுத் தலைவருக்கு அனைத்து அதிகாரங்களையும் கொடுத்துப் பாராளுமன்ற அதிகாரத்தை அவர்கள் தடுத்து விடுவார்களேயானால், குடியரசுத் தலைவர் எவ்வகைச் சட்டத்தையும் நேரடியாகக் கொண்டு வரும் அதிகாரம் பெற்று விடுகிறார்; அதனால்தான் இச்சட்டத்தை மக்கள் எதிர்க்கக் கூடாது என்பதற்காக அவர்கள் பல வகைக் காரணங்களைக் காட்டி வருகிறார்கள். என்ன காரணங்கள் அவை? பாக்கித்தான் நமது நாட்டின் மீது படையெடுத்து வருகிறது. அல்லது சீனா படையெடுக்கும் என்று போர் அச்சத்தை மக்களிடத்திலே தூண்டுகிறார்கள். இப்படி இந்தியாவுக்கு வெளிநாடுகளிடமிருந்து ஒரு போர் ஏதம் இருப்பதினாலே இங்குள்ளவர்கள் ஒருமைப் பாட்டுடனும், தேசிய உணர்வுடனும் இருக்க வேண்டும் என்று கூறி, இந்திய மக்களுக்கு இருக்கிற உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்டு, அரசியல் சட்டத்தை மீறிய ஆட்சியுரிமையை எடுத்துக்கொள்வதற்கு ஏற்கனவே உள்ள கருப்புச் சட்டங்கள் வழி வகுத்திருக்கின்றன. ஆனால் அந்தச் சட்டங்களைக் கூட எதிர்த்துச் சட்டமன்றத்தில் வழக்காடலாம். ஆனால் 59-ஆவது சட்டத்திருத்தம் வந்த பிறகு, அந்த நடைமுறை கூட குடிமக்கள் யாரும் செயல்படுத்த முடியாதபடி இந்தச் சட்டம் தடுத்து விடுகிறது. எனவே படிப் படியாக மக்களின் உரிமைகளைப் பறித்துத் தங்கள் ஆட்சி அதிகாரத்தை விரிவுபடுத்திக் கொள்வதற்காகத்தான் அவர்கள் இச்சட்டத்தை மிக விரைவாகக் கொண்டு வர இருக்கிறார்கள்.

உங்களுக்குத் தெரியும். அண்மையில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடி வந்தார்கள். ஏறத்தாழ ஒரு மாதத்திற்கும் மேலாகத் தொடர்ந்து அந்தப் போராட்டத்தை நடத்தி வந்தார்கள். இறுதியாக நேற்று சென்னையிலே என்ன நடந்தது தெரியுமா? ஆசிரியர்கள் தங்களுடைய முற்றுகைப் போராட்டத்துக்காகத் தங்கள் ஊர்களிலிருந்து—தமிழ்நாடு முழுவதிலுமிருந்து—சென்னைக்கு வர முயற்சி செய்தார்கள் முற்றுகையிட்டார்கள். அப்பொழுது சென்னை நகருக்கு வெளியிலேயே அவர்கள் பயணம் செய்து வந்த வண்டிகளைத் தடுத்து நிறுத்தி, அவர்களை விரட்டி விரட்டி அடித்தார்கள் காவல் துறையினர். நான்கைந்து பேர் சேர்ந்து ஒன்றாக அந்த முற்றுகைப் போராட்டத்திலே கலந்து கொள்ள நகருக்குள் வந்தவர்களைக் கூண்டோடு பிடித்துப் பேருந்துகளிலே கொண்டு போய் நகரத்துக்கு வெளியிலே வெகுதூரத்திலே இறக்கி விட்டு விட்டார்கள். இக்கொடுமையை இச்சட்டப்படி எவரும் கேட்க முடியாது.

எடுத்துக்காட்டாக, அண்மையில் இன்சாட்-1 என்ற செயற்கைக் கோளை வானிலே விட்டுத் தோல்வியடைந்தார்கள். இதனால் 16 கோடி உருபா இந்நாட்டு மக்களுடைய பணம் பாழடிக்கப் பட்டுள்ளது. அது மட்டுமன்று; நமது தலைமை அமைச்சர் ராசீவ் தமது நலனுக்காக—பாதுகாப்புக்காக—ஒரு நாளைக்கு ஒரு கோடி உருபா செலவிட்டுக் கொண்டிருக்கிறார். இப்படி மக்களுடைய வரிப் பணம் எந்தெந்த வகையில் எல்லாம் வீணாக்கப்படுகிறது என்று ஒருவர் பேச முடியாது.

59-ஆம் திருத்தச் சட்டத்தைப் பஞ்சாபின் நடைமுறையைக் காட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள். பஞ்சாபில் மக்கள் எப்படியெல்லாம் போராடுகிறார்கள் அப்படியே வேறு மாநிலங்களிலும் போராடுவார்கள் என்று சொல்லமுடியாது. ஆனால் அப்படிப் போராட்டம் நடைபெறலாம் என இவர்களே கணித்துக்கொண்டு மக்கள் எங்கெங்குத் தங்கள் உரிமைகளைக் கேட்கிறார்களோ, அங்கெல்லாம் அவர்களின் உரிமைகளைப் பறிக்க மிகக் கவனமாக, மிக அழுத்தமாக, மிக விரிவாகத் தங்களுக்குள்ள அதிகாரங்களை அவர்கள் வலுப்படுத்திக் கொள்ளும் முறையில்தான் இந்தக் கருப்புச் சட்டங்கள் போடப்படுகின்றன. இந்தக் கருப்புச் சட்டங்களை விரிவாக எடுத்துப்பேசி நம்முடைய முன்னாள் நடுவர் வி. ஆர். கிருட்டிணய்யர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். மக்களுக்கு எந்தெந்த வகையில் உரிமைகள் இல்லை, இல்லாமல் பறிக்கப்படுவது என்றெல்லாம் விளக்கிப் பேசினார்கள்.

மக்கள் போராட வேண்டும். உண்மையான போராட்டங்களை அரசு நடைபெற விடாமல் தடுக்கக் காத்திருக்கிறது. ஆயினும் கூட இந்த நிலையிலே மக்கள் தங்கள் உரிமைக் குரலை இது போன்ற கூட்டங்கள் நடத்தி வெளியிட வேண்டும். போராட்டங்களின் மூலம் மக்கள் தங்கள் உரிமை

Scanned with CamScanner

களை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும். அதற்குரிய முயற்சி மக்களிடமிருந்து தான் வரவேண்டும். எத்தனை அறிஞர்கள் இதைப்பற்றி விளக்கிப் பேசினாலும், அவர்கள் எல்லாம் இந்த முயற்சியைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. எந்த அறிஞரையும் இந்த அரசு மதிப்பதில்லை, விலங்குகளில் கூட நான்கு மாடுகள் சேர்ந்து தெருவில் போகலாம். ஆனால் நான்கு ஆட்கள் சேர்ந்து தங்களுக்குள் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளக்கூடாது என்கிற • நடைமுறை இருக்குமானால் இந்த நாட்டைப் பற்றி நாம் என்ன சொல்வது?

எனவேதான் இந்த நிலைமைகளைப் பற்றி மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று சொல்வதற்கு இந்தப் பாசிச எதிர்ப்பு இயக்க மாநாடு இங்கே நடத்தப்படுகிறது. இந்த மாநாட்டின் இன்றியமையாத முகாமையான அந்தக் கொள்கைகளை விளக்கிப் பேசுவதற்குப் பல தரப்பட்ட நிகழ்ச்சிகள் இன்றும் நாளையும் நடக்க இருக்கின்றன. மக்கள் என்றைக்கு ஒன்று திரள்கிறார்களோ, ஒன்று திரண்டு தங்கள் கருத்துகளை முழுமையாக, துணிவாக, ஒட்டு மொத்தமாக எடுத்துச் சொல்கிறார்களோ, அந்த உணர்ச்சிதான் எதிர்காலத்தில் வெற்றி பெறக் கூடிய உணர்ச்சியாக இருக்கும். மற்றபடி எந்தச் சட்டமோ, அல்லது வேறு எந்தப் போராட்டமோ வேறு எந்த அறிஞர்களின் அறிவுரையோ, இந்த அரசுக்கு ஏற்காது; அப்படி ஏற்கும்படி அவர்கள் தங்களுடைய நிலையை அமைத்துக் கொள்ளவில்லை. எந்த உரிமை உணர்ச்சியையும் எந்த அரங்கிலிருந்து வந்தாலும் அதைத் தடுத்து நிறுத்த அவர்கள் ஏற்கனவே பல கறுப்புச் சட்டங்களைப் போட்டுள்ளனர். எனவே மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

மக்கள் என்று சொன்னால் இங்கு விலங்குகளுக்கு உள்ள உரிமைகள் கூட கிடையாது. ஏனென்றால் விலங்குகளுக்குக் கூட உண்ணுவதற்கும் ஓர் இடம் உள்ளது. ஆனால் மக்களுக்கு அப்படி உண்ணுவதற்கும் வாய்ப்பில்லை. தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொள்ள ஏதாவது ஒரு வழியை மேற்கொள்ளவும் முடியாமல் இருக்கிறார்கள். உழவர்கள் ஒடுக்கப்படுகிறார்கள். தொழிலாளர்கள் ஒடுக்கப்படுகிறார்கள். அவர்களுடைய குரல்கள் எந்த நிலையிலும் ஏற்கப்படுவதில்லை. அடிமைகள் போல மக்கள் வேலை வாங்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களது உரிமைக்காக எந்த அமைப்பும் போராட முடியாதபடி கருப்புச் சட்டங்கள் தடை செய்கின்றன. எனவே சுருக்கமாக உங்களுக்கு இதனை விளக்குவதற்காக இத்தகைய மாநாடுகள் நடத்தப்படுவதை நாம் வரவேற்கவேண்டும். இத்தகைய மாநாடுகள் போட்டுத்தான் உரிமைகளைப் பற்றி மக்களிடத்திலே விழிப்புணர்ச்சியைப் பரப்ப முடியும். சிற்றூர்களிலே, (கிராமங்களிலே) இளைஞர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் மக்களை அணுகி இந்தக் கருப்புச் சட்டங்கள் பற்றி அந்த மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். பல வகையிலும் அந்தக் கொடுமையான வன்முறை அதிகாரத்தைப் பற்றிப் பல வகையிலும் விளக்க வேண்டும். அப்போதுதான் இந்த நாட்டு மக்கள் விழிப்புணர்வு பெற முடியும்.

ஏற்கனவே அரசியல் கட்சிகள் பல வகையிலும் மக்களை ஏமாற்றிக் கொண்டு மக்களுக்கு உரிமை உணர்வு குறித்து என்னவென்றே தெரிவிக்காமல் தங்கள் ஆரவார ஆடம்பரக் கவர்ச்சியான நடவடிக்கைகளால் மக்களைக் கூறுபோட்டுக் கொண்டுள்ளன. மக்கள் சிந்திப்பதற்கு எந்த வாய்ப்பையும் தராதபடி வானொலியும், வானொளியும் பலவகையான விளையாட்டுக்களையும் காட்டி மக்கள் தங்கள் உரிமைகளைப் பற்றிச் சிந்திக்க விடாமல் செய்து கொண்டிருக்கின்றன, இந்த நிலையில் எந்த அரசின்கீழ் இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டு, இந்தக் கொடிய அரசின்—மக்கள் நலனைக் கருதாத அரசின்—கருப்புச் சட்டங்களை எதிர்ப்பதற்காக மக்கள் ஒன்று திரண்டு வர வேண்டும். அதுதான் இத்தகைய மாநாட்டின் குறிக்கோள்.

இந்தக் கொள்கை பரப்பும் முயற்சி வெற்றி பெற வேண்டும். அதற்கு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். நமக்குப் பலவகையிலும் தனித்தனிகொள்கைகள் இருக்கலாம். அதைப்பற்றி நாம் பகை கொள்ளக் கூடாது; நமது அடிப்படை உரிமைகள் பறிக்கப் படும்போது அந்த உரிமைகள் மீட்டுப் பெறுவதற்கு என்னென்ன முயற்சிகள் செய்ய முடியுமோ அந்த முயற்சிதான் முதல், தலையாய கடமை. இந்த மாநாட்டை நடத்துகின்ற, அப்படிப்பட்ட கருத்துகளை மக்களிடையே பரப்பிக் கொண்டுள்ள பாசிச எதிர்ப்பு இயக்கத்தை மனநிறைவோடு வாழ்த்தி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். வணக்கம். O

நன்றி: *மாநாட்டுச் சிறப்பு மலர்.*

கேட்பதற்கு ஆள் இல்லை!

தில்லி-சண்டிகார் வானூர்திக் கட்டணம் உருபா 490 மட்டுமே. ஆனால், எல்லைக் காவல் படையின் வானூர்தியில் செல்லத் தலைமை அமைச்சர். இராசீவின் செயலாளர், திருவாட்டி. சரளா கிரேவால் செலவான உருபா 45 ஆயிரம் இருக்குமாம். இந்த விலை உயர்ந்த செலவால், தமிழ் நிலத்தை மயிரளவும் தாக்காதென நம் மக்கள் இருப்பதால்...ஆள்பவர் ஊழல்...கேட்பாரின்றிப் பெருகி விடாதோ?

—பறம்பை அறிவன்.

Scanned with CamScanner

கல்வித் துறையில்- ஒரே கொள்கையைக் கடைப் பிடிக்க வேண்டும்!

தமிழக ஆசிரியர் கூட்டணி வேண்டுகோள்!

நாட்டு விடுதலைக்குப் பின் கல்விக் கூடங்கள் எண்ணிக்கை பெருகியுள்ளது. கற்பிப்போர் கற்போர் தொகையும் கூடக் கூடியுள்ளது. அறிவியல் ஆராய்ச்சி போன்ற துறைகளும் விரிவடைந்துள்ளன.

ஆனால் கற்பிப்போர் முன்னேற்றமோ ஆமை வேகத்திலேயே அமைந்து உள்ளது! எடுத்துக் காட்டாக ஒன்றை மட்டும் நினைவூட்டுகிறோம்.

ஈட்டிய விடுப்பு: ஆறுயிரம் கற்களுக்கு அப்பாலிருந்து வந்த வெள்ளையர் காலத்திலிருந்து 1981 வரை ஆண்டுக்கு 200, 220 நாள்கள் உழைத்திடும் ஆசிரியர்க்கு அளித்திடும் ஈட்டிய விடுப்போ 3 நாள்கள் மட்டுமே. இதை ஒப் படைத்துப் பணமாக்கும் உரிமை உண்டு. 15 நாள்கள் ஒப்படைத்துப் பணமாக்க வேண்டுமானால் 5 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். இதனை உயர்த்த வேண்டிக் கோரிக்கை வைத்தோம். ஊர்-வலங்கள் நடத்தினோம். ஆள்வோரிடம் முறையிடு செய்தோம். ஆனால் விடுதலை பெற்று 34 ஆண்டு களுக்குப் பின் 1981 ஆம் ஆண்டு அது பத்து நாள்களாகியது. 1985இல் ஆசிரியர்களின் வீரம் செறிந்த போராட்டத்தின் விளைவாக அது பதினைந் தாக உயர்ந்தது.

விடுதலைக்கு முன்பிருந்து பணியாற்றிய ஆசிரியப் பெருமக்கள் பலர் 1981 வரை இவ் வெளிய சலுகைகளைக் கூடப் பெற முடியாமல் ஏக்கப் பெரு மூச்சோடு ஓய்வு பெற்றனர்.

'உரிமை பெற்ற நாட்டில் பணியாற்றினோம்' என்ற வெற்றுப் பெருமையைத் தவிர வேறு எதை யும் அவர்களால் பெற முடியவில்லை என்பது கண் கூடு.

கல்வித் துறையில் பல்லாண்டுக் காலம் பணி யாற்றிப் பைந்தமிழ் ஆயும் தலைமையாய்த் திகழ்ந்து பல்வேறு சிக்கல்களை எளிதில் உணர்ந்துகொள்ளும் அரசு, எங்கள் குறைகளைக் களையும் என்று முழுமையாக நம்புகிறோம்.

தமிழ்நாட்டுக் கல்வி நிலையில் தொடக்கக் கல்விதான், நாட்டின் அடித்தளம் என்பதை எல்லாரும் அறிவார்கள்;

1 முதல் 5 வகுப்புள்ள அத் தொடக்கக் கல்வி நிலையத்தின் தலைவர் தலைமையாசிரியர் என்று அழைக்கப்படுகிறார். பதவி மட்டும் தலைமையாசிரி யர் என்று அமைக்கப்படுகின்றதே தவிர, தலைமை யாசிரியருக்குரிய தனியான ஊதிய விழுக்காடில்லை!

நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்க்குத் தனியே ஊதிய விழுக்காடு உண்டு. உயர்நிலை, மேனிலைப் பள்ளித் தலைமையாசிரியர்க்கும் தனி ஊதிய விழுக்காடு உண்டு. ஆனால் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மட்டும் தனி ஊதிய விழுக்காடில்லை; ஏன் இந்த இழி நிலை! என்று பலமுறை கேட்டு விட்டோம்.

ஒரே கல்விக் கொள்கை! ஒரே ஊதியமில்லை: நாடு முழுவதும் ஒரே கல்விக் கொள்கை வேண்டும் என்று நடுவண் ஆட்சி சொல்ல, மாநில ஆட்சி களும் அதை ஏற்கின்றன! நாங்களும் அதை வரவேற்கிறோம். செயல்படுத்தவும் ஆயத்தமாக உள்ளோம்.

நாடு முழுவதும் ஒரே கல்விக் கொள்கை வேண்டும் என்று கூறும் அரசு நாடு முழுதிற்கும் ஒரே சீரான ஊதியம் ஏன் வழங்கக் கூடாது?

ஒரே கல்வி, ஒரே தகுதியோடு ஒரே நிலையில் பணியாற்றும் ஆசிரியர்க்கு வெவ்வேறு ஊதியம் வழங்குவது ஏன்?

கடலூரில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்க்கு அடிப்படை ஊதியம் உரு-610. ஆனால் காரைக்காலில் பணியாற்றும் அதே தகுதி யும் அதே வேலையுமுள்ள இடைநிலை ஆசிரியர்க்கு அடிப்படை ஊதியம் உரு. 1200/-

நாடு முழுதும் எல்லாவற்றிலும் ஒத்த உணர்வு வேண்டும் என்று முழங்கும் பெரியவர்கள் இதில் மட்டும் வேறுபாடு காண்பது ஏன் என்பதை அரசின் மேலான சிந்தனைக்கு விடுக்கிறோம். வரவிருக்கின்ற ஊதியக் குழுவின் பரிந்துரை ஆசிரியர்களின் வாழ்வினை உயர்த்துவதாக அமைய வேண்டும் என்பதே எங்கள் வேண்டுகோள்!

வீட்டு வாடகை: மாநகராட்சி, நகராட்சி, வட்டாட்சியின் தலைமையிடம் ஆகியவற்றில் பணி யாற்றும் ஆசிரியர் அரசு ஊழியர் வீட்டு வாடகைப் படி பெற்று வருகின்றனர். சிற்றூர்ப் பகுதியில் பணியாற்றும் ஆசிரியர்க்கோ வீட்டு வாடகைப் படியே இல்லை!

தமிழ்நாட்டுச் சிற்றூர்கள் அனைத்திலும் பொருளியல் நிலை, வீட்டுச் சிக்கல் ஒரே நிலையில் உள்ளபோது, ஊராட்சி ஒன்றியத்தின் எல்லை, நகரத்தின் எல்லையை 8: 16: 32 அயிரமாத்திரியில் (கி. மீட்டரில்) தொடரவேண்டும் என்ற நெறியை நீக்கி, எல்லாச் சிற்றூர்ப் புற ஊழியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி வழங்கிட வேண்டுகிறோம்.

ஊதியக் குழுப் பரிந்துரை வரும்போது அரசு எங்கள் பக்கம் நின்று எங்கள் உள்ளம் மகிழும் தீர்ப்பை வழங்கிடுமாறு தமிழக ஆசிரியர் கூட்டணிச் சார்பில் வேண்டுகிறோம்.

மே- அ. கிருட்டிணன்

—நன்றி: ஆசிரியர் குரல் 1-3-89

Scanned with CamScanner

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவில் தமிழகக் கைவினைஞரின் காலணிக்கு நல்ல மதிப்புள்ளதாம். இங்கே, 'காலுக்குச் செருப்புமில்லை, கால்வயிற்றுக் கஞ்சியுமில்லை' என்ற நிலைமை உள்ளது. என்றுதான் விடியுமோ? தமிழகம் விழிப்புறுவதும், விடிவு காண்பதும் இளைய தலைமுறையின் கையில்தான்!

6. 'சனசக்தி'யும்—கூடங்குளமும்!

அறிவியல், மக்களுக்காகவே! மக்களைக் காப்பாற்றிக் கொள்ள மக்களுக்குத் தெரியும் என்றால், இந்த வெங்காயக் கட்சிகள் எல்லாம் எதற்கு? அறிவியலை அழிவியலுக்குப் பயன்படுத்தினால்...அது தமிழகத்தில் நடைபெறுமானால்... பார்த்துக் கொண்டிருப்போமோ?

தமிழக நலனை மறந்து, 'உலகியம்' பேசிக் கொண்டிருப்பதில் ஏது நன்மை? தமிழகம் என்பது மக்களை 'அழித்து' வளப்படுத்தினால் உயர்ந்து விடுமா?

'அறிவியல்' என்றதுமே முற்போக்கு என்று கருதுவதா சனசக்தியின் நிலை? 'மக்கள் ஆற்றலை' மறந்து விட்டு, அறிவியல் குத்தகையாளர்களின் பின்னே' சென்று கொடிபிடிக்க நாம் ஒப்ப மாட்டோம்.

'கூடங்குளம்' உடனடித் தேவையா? இந்த 'அணுவுலை மின்திட்டம்' பற்றிய அச்சம் மாயை எனில், 'செர்னோபில் அழிவை-கேட்டினை-மூடி மறைப்பதேன்? எண்ணிப் பார்த்தல் வேண்டும்!

7. கருணாநிதியும்—இராசீவ் காந்தியும்!

"தேசிய முன்னணியில் உள்ள எந்தவொரு கட்சியும் பிரிவினைப் பேச்சை ஊக்குவித்ததில்லை; இனி வருங்காலத்திலும் பிரிவினைகளை ஊக்குவிக்காது" என்று இராசீவின் பேச்சுக்குக் 'கலைஞர்' கூறியுள்ள கருத்து கொஞ்சம் அதிகம்படித்த தனமாகவே படுகிறது!

"வருங்காலத்திற்கும் சேர்த்து உறுதி கூற இவர் யார்!" என்று நாம் கேட்க அணியமாக இல்லை. ஆனால், 'பிரிவினைக்கானக் காரணங்கள் அப்படியே இருக்கின்றன" என்ற 'பேச்சு' இனி இல்லை என்கிறாரா கலைஞர்? அல்லது, இராசீவ் ஆட்சியிலோ, இனிவரும் ஆட்சியிலோ அந்தக் காரணங்கள்' இல்லாமற்போய்விடும்; 'போய் விட்டன' என்கிறாரா?

நாம் 'உரிமை' கோர முடியாமல் போகலாம். காரணம் 'கலைஞர்' கூட இந்த வகையில் நமக்கு உறுதியான உதவியாக இல்லை என்பதுதான்!

8. பார்ப்பனர்விடமிருந்து ஒரு படிப்பினை:

8-12-88 தினமணி ஆசிரியவுரை பார்ப்பனர்வின் நிலையைச் சுட்டிக் காட்டி அரசியலையும் மதத்தையும் ஒருங்கிணைக்கக் கூடாது என அறிவுறுத்தியுள்ளது.

அரசியல் என்ற தூய அற நெறியை உருவாக்கப் போராடும் 'தினமணி' காந்தியத்தின் பேரால் நல்லாட்சி முன்னணி கட்ட ஆதரவாக வுள்ளது. இந்த 'முன்னணி' கூடாரத்தில் 'இந்து மதவெறி'யாளர் நெறியாளர்களாக உள்ளதை நாம் காணலாம். அப்படியிருக்கத் தினமணியின் அறிவுறுத்தலுக்குப் பின்னணியும் இருக்கத்தான் வேண்டும்!

தமிழர் தேசிய இயக்கம் கட்டும் ப.நெடுமாறன் கூட 'மத நிறுவனங்களுக்குத் தன்னாட்சியுரிமை'-யைக் கேட்பதாக அறிகிறோம். தமிழரின் தமிழ் நெறியை நாம் உயர்த்திப் பிடித்தல் வேண்டும். ஒப்போலை(வாக்கு)ச் சீட்டுக் கட்சிகள் போல 'அடிபிடியில்' இறங்கும் இந்த மத நிறுவனங்களுக்கு உரிமை கேட்பதை நெடுமாறன் தவிர்ப்பார் என எதிர்பார்க்கிறோம்,

அரசியல் ஆணை பெற்று அதிகாரம் பற்றும் எவரும், மக்களையே அடிப்படையாக எண்ணி ஆள்தல் வேண்டும். இதனை விட்டு, மதம் சாதி களுக்கு 'உரிமை' என்ற பேரில் இடங்கொடுத்தால் ஏற்படும் அவலத்தை நாம் ஒப்புக் கொள்வோம்.

அதே வேளை ஒரு தேசிய இனத்தின் விடுதலைக் குரலில் அத் தேசிய இன நம்பிக்கைகளும், கட்டுப்பாடும், கலைப்பண்பாடு, ஒழுக்கங்களும் சேர்ந்தே இருக்கும். இங்கே, 'தனிமாந்தன்' பற்றி அதிகம் பிதற்றாமல், அவ்வின மக்களின் உரிமையூடாகவுள்ள உணர்ச்சியை மதிக்கவும் நாம் கற்றுக் கொள்ளுதல் வேண்டுமன்றோ?

மக்கள் போராட்டம்

பலியபால்—போக்ராயப் பகுதி ஒரிசாவில் உள்ளது. இதனைத் "தேசிய ஆய்வுப் பகுதி" (NTR) என்ற பேரில் பாதுகாப்புத் துறை அமைச்சகம் கைப்பற்றப் பல சூழ்ச்சி முறைகளைக் கையாண்டு வருகிறது. இங்கே படைத்துறை குண்டுவெடிப்பு — 'ஏவுகணை' ஆய்வுகளைச் செய்ய மக்கள் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது; ஓரிலக்கத்திற்கு மேற்பட்ட மக்கள் "நிலம் எமது, கடல் எமது; அரசுக்கு இங்கு என்ன வேலை" என முழங்கி ஆர்ப்புற்றெழுந்துள்ளார்கள்.

மக்களை வெளியேற்றிடவும் அடக்கவும் நினைக்கும் அரசுக்கு அப்பகுதி மக்கள் தொடர்ந்து கொடுத்து வரும் 'அடிகளால்' பகடிக்கூத்துக்கு ஆளாகியுள்ளது இந்திய அரசு!

—பறம்பை அறிவன்.

Scanned with CamScanner

குடமுருட்டியிலிருந்து கொடைக்கானல் வரை..!

தமிழ்நாடு விடுதலைப் படையும் இந்தி(ய)ப் பாசிசக் கும்பலும்!

-செ. அமிழ்தன்-

"புரட்சிகர எழுச்சியானது போர் அல்லது பிற செயல்களைப் போலவே ஒரு கலையாகும். அஃது சில செயல்முறை நெறிகளுக்கு உட்பட்டதாகும். அந் நெறிகளைப் புறக்கணித்தால் அவ்வாறு புறக்கணிக்கும் கட்சிக்குச் சீரழிவுதான் ஏற்படும்."

—*காரல் மார்க்சு.*

"கருவியேந்திய எழுச்சியானது ஓர் அரசியல் போராட்டத்தின் மிகச் சிறப்பான வடிவமாகும். அது சில சிறப்பு நெறிகளுக்குக் கட்டுப்பட்டதாகும். அது குறித்துக் கவனமாகச் சிந்தித்தல் வேண்டும்."

—*இலெனின்:*

அண்மைக்காலமாகத் தமிழகம் இந்தி(ய)க் கொலை வெறி ஓநாய்களின் திறந்த வெளி வேட்டைக் காடாக மாறிக் கொண்டு வந்துள்ளது; வருகின்றது. இதற்குக் கரணியங்கள் ஏதும் இல்லாமல் இல்லை. கடந்த சில ஆண்டுகளாகவே தமிழகத்தில் சில வெடிகுண்டு நிகழ்வுகளும், அவற்றால் பரபரப்பான அரசியல் முடுக்கமும் அவ்வப்போது அரங்கேறியுள்ளன. இவற்றிற்குப் பின்னணியாகத் ***'தமிழ்நாடு விடுதலைப் படை' 'இந்தியத் தமிழர் விடுதலை இராணுவம்' 'தமிழ் நாடு தமிழர் விடுதலை இயக்கம்'*** போன்ற சில அமைப்புகள் இருந்து வருவதாக வெளிக்கிளம்பும் அரசியல் பரபரப்புகள் அலை மோதிக் கொள்கின்றன. இந்த அரசியல் பரபரப்புகளே இத்தகு கொடிய நிலைமைக்குக் கரணியம்.

இவ்வாறு குண்டு வெடிப்புகளாக, கொள்ளைகளாகத் திடுமென எழும் பரபரப்பு அரசியலை வழக்கம் போல இந்தி(ய) ஆளும் வகுப்பு—பாசிசக் கும்பல்கள் (தில்லி மற்றும் தமிழகம்) கொடுஞ் செயல்கள் (பயங்கரவாதப்) பட்டங்கட்டி மக்களை மிரட்டும் அரசியலாக மாற்றிக் கொண்டு வந்துள்ளனர்; வருகின்றனர். எனவே நிசழும் செயல்களுக்கான கரணியங்களும், அடிப்படையும் மக்களுக்குப் புரியாதவையாகவே இருந்து வருகின்றன. அதனால் இந்நிகழ்வுகளுக்கு அடிப்படை யாது? இந் நிகழ்வுகள் எதற்காக நிகழ்த்தப்படுகின்றன? இவற்றின் நோக்கம் என்ன? இவற்றை நிறைவேற்றுவது யார்? போன்ற வினாக்கள் மக்களிடையே எழும்பித் தங்கள் ஐயுறவை நிலைநாட்டி வருகின்றன. எனவே இவ்வினாக்களுக்குரிய விடைகளைத் தேடுவதன் மூலம் சில அரசியல் புதிர்களை நாம் விடுவிக்க முடியும்.

குடமுருட்டிக் குண்டு வெடிப்பும் அரசியல் பரபரப்பும்:

இனி நிகழ்வுகளுக்குத் திரும்புவோம். கடந்த 1986-ஆம் ஆண்டின் முற்பகுதியில் இந்தி(ய)த் தில்லியரசின் ஆளும் பாசிசக் கும்பல் கொலை வெறியர் இராசீவின் தலைமையில் தமிழகத்திற்குள் உலா வந்த போதுதான், அரசியல் பரபரப்புக்கான அடிப்படை எழுந்தது, ஆம்! அப்பொழுதுதான் தஞ்சை மாவட்டக் கண்டியூர் சாலையில் உள்ள குடமுருட்டி ஆற்றுப் பாலத்தில் குண்டு வெடித்தது. இக்குண்டு வெடிப்பு நிகழ்வில்தான் ***"தமிழ் நாடு விடுதலைப் படை"*** தன்னை வெளிக் காட்டிக் கொண்டது. அத்துடன் அவ்வமைப்பு "தனித் தமிழ் நாட்டிற்காகப்" போராடப் போவதாகவும் அறிவித்தது. இதில் இருந்துதான் பரபரப்பு அரசியல் முடுக்கம் பெற்றது.

குடமுருட்டி ஆற்றுப் பாலத்தில் குண்டு வெடித்த போது இந்தி(ய)ப் பாசிசக் கும்பல்கள் தங்கள் படைகளுடன் தஞ்சைத் திருவையாற்றில் தங்கல் இட்டிருந்தன. அத்துடன் பல கோடி உருபாக்கள் செலவில் **"தென்னகப் பண்பாட்டு நடுவம்"** என்ற பாசிசக் கூச்சல் நடுவத்தைத் திறந்து வைக்கவும் காத்துக் கிடந்தன. ஆனால் அப்பகுதி வாழ் மக்களின் வாழ்நிலையோ வேறு. திருவையாறு தமிழகத்தின் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த பகுதியாகும். பல்லாண்டுக் காலமாகத் தஞ்சை மாவட்ட மக்களின் வாழ்வை உலுக்கிக் கொண்டிருக்கும் சிக்கலாக உயர்வு பெற்றிருப்பது ***காவிரி நீர் உரிமைச் சிக்கலாகும்.*** இச் சிக்கலால் அப்பகுதிப் பெரும்பான்மை மக்களாகிய உழைக்கும் உழவர்களின் உழவுத் தொழில் நலிந்து கொண்டே வருகின்றது.

இச்சூழ்நிலையில்தான், பாசிசக் கும்பல்கள் கூடாரம் அடித்தலும், ஆற்றுப் பாலத்தில் குண்டு வெடித்தலும் நடந்தேறின. குடமுருட்டியில் குண்டு வெடித்த காலத்தில் சில புரட்சிகர அமைப்புகள் ***'ஆட்சியாளர்களின் வஞ்சனையே (சதியே) குண்டு வெடிப்புக்குக் கரணியம்'*** என அம்பலப் படுத்தி அறிக்கைகளை வெளியிட்டன. ஆக குண்டு

Scanned with CamScanner

வெடிப்பு யாரால் நிகழ்ந்ததாக இருப்பினும் அதற்கு ஓர்-அரசியல் உள்ளடக்கம் இருந்துள்ளதை நாம் புறந்தள்ளி விட முடியாது. ஏனெனில் அரசியல் பரபரப்பிற்கான அடிப்படை அதுவே.

குண்டு வெடிப்பும், அதற்கான காரணியமும்:

எனவே அரசியல் பரபரப்பிற்கான அடிப்படையை ஆய்வோம். பல்லாண்டுக் காலமாகவே உள்ள காவிரி நீர்ச் சிக்கலைத் தீர்த்து வைக்கக் கோரி, பல்லாண்டுகளாகவே தஞ்சை மாவட்ட மக்கள் இந்தி(ய) நடுவணரசாக உள்ள தில்லி வல்லரசையும், அதன் பாதந்தாங்கியாக உள்ள (அன்றைய) தமிழக மாநில அரசையும் மன்றாடிக் கேட்டு வந்துள்ளனர். இச் சிக்கலைத் தீர்த்து வைக்க முன் வராத இந்தி(ய) பாசிசக் கும்பல்களே தங்களுடைய ஆடம்பரப் பெருமையைப் பறைசாற்றும் 'பாப்பனிய—பாசிசப் பண்பாட்டு நடுவத்தைத் திருவையாற்றில் திறந்து வைக்க முன்வந்தன. உழைக்கும் மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களுக்குத் தீர்வு காண முன் வராத வக்கற்ற பாசிசக் கும்பல்களே தமது உயர்குடியினரின் ஆடம்பர வாழ்க்கைக்கு ஒரு திறந்த வெளி அரங்கை அமைத்துத் தர முன்வந்தன. இஃது அப்பகுதி மக்களிடையே ஓர் இயல்பான எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தவே செய்யும். **தில்லி வல்லரசின் கண்டு கொள்ளாத போக்கே இவ்வெதிர்ப்புணர்வு எழும்பக் காரணியமாகும்.** எனவே இவ்வாறெழுந்த இயல்பான எதிர்ப்புணர்வின் வெளிப்பாடே 'தமிழ் நாடு விடுதலைப் படை'யினரால் குடமுருட்டியில் குண்டு வெடிப்பாகக் காட்டப்பட்டது என நாம் கருதலாம்.

இதை மட்டுமே குண்டு வெடிப்பிற்கான காரணியமாக எடுத்துக் கொள்ளல் முடியாது. ஏனெனில் இதில் ஓர் ஆட்சித் துறை உள்ளடக்கமும் உண்டு. அதை நாம மறந்து விடல் கூடாது. தஞ்சை மாவட்ட மக்களின் வாழ்க்கையோடு இணைந்த காவிரிநீர்ச் சிக்கலைத் தீர்க்காது தனது பொறுக்கித் தனத்தால் இழுத்தடித்தே வந்துள்ள இந்தி(ய) ஆளும் கும்பல், தஞ்சைப் பகுதி மக்களிடையே அம்பலப்பட்டும், தனிமைப்பட்டுக் கொண்டும் வந்துள்ளது; வருகின்றது. அதனால் தஞ்சைப் பகுதிகளில் தங்களுக்குப் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுவதாக அக் கும்பல் கருதி வந்தது. எனவே தஞ்சை மாவட்ட மக்களிடையே இருந்து வரும் எதிர்ப்புணர்வை அப்படியே அச்சவுணர்வாக மாற்றம் அடையச் செய்வதன் மூலமே தங்களுடைய படைபட்டாளங்கள் தங்கள் விருப்பம் போல இயங்க முடியும் என்ற நிலைப்பாட்டை அக் கும்பல் அடைய வேண்டிய தேவை எழுந்தது அத்தகு நிலைப்பாட்டின் வெளிப்பாடே குண்டு வெடிப்பாக நிகழ்ந்திருக்க வேண்டும். ஏனெனில் பாசிசர்கள் (Fascists) என்றும் கொடும் போராட்டக் கொள்ளியை எடுத்துத் தங்களுடைய முதுகைத் தாங்களே சொறிந்து கொள்ளத் தயங்கியதே இல்லை.

ஆக, குடமுருட்டி ஆற்றுப் பால நிகழ்வு ஆட்சியாளர்களின் வஞ்சகத்தின் மூலமாகவோ, அல்லது தமிழ் நாடு விடுதலைப் படையினராலோ நிகழ்த்தப் பட்டிருப்பினும் மேலே கூறியவையே உள்ளடக்கமாக இருந்திருத்தல் வேண்டும். இந் நிகழ்வு தமிழகத் தஞ்சை மாவட்ட மக்களின் எதிர்ப்புணர்வைக் காட்டவே நடந்திருப்பின அவ்வெதிர்ப்புணர்வு உருவாவதற்குக் காரணியமாக அமைந்த காவிரிநீர்ச்சிக்கலை நாம் இங்கு பார்த்தோமெனில், அவ்வெதிர்ப்புணர்வின் தன்மையையும், தஞ்சை மாவட்ட மக்களின் கவலையான வாழ்நிலையையும் நாம் அறிய இயலும்.

காவிரி நீர் உரிமைச் சிக்கலும் அதன் வரலாற்றுப் பின்னணியும்:

காவிரி நீர் உரிமைச் சிக்கலானது ஆற்று நீர் பங்கீட்டுச் சிக்கலாகும். அ'து இரு மாநிலங்களுக்கும் இடையே இருந்து வரும் சிக்கலாகும். காவிரி ஆறானது, அண்டை மாநிலமான கருநாடகத்தில் குடகு மாவட்ட மலைப் பகுதியில் தோன்றி ஓடி வரும் ஓர் ஆறாகும். காவிரியாற்றின் கழிமுகப் பகுதியே (Delta) தமிழகத்தின் தஞ்சை மாவட்டமாகும். ஆகவேதான் காவிரி நீர் உரிமைச் சிக்கல் தமிழகம் மற்றும் கருநாடகம் ஆகிய இரு மாநிலங்களுக்கிடையே உள்ள சிக்கலாக வளர்ந்து வந்துள்ளது. இச்சிக்கலுக்கு ஒரு நெடிய வரலாறு உண்டு. அதில் பல நூற்றாண்டுகளும் கடந்துண்டு. அவ் வரலாற்றைக் காண்பதன் மூலமே நாம் இச்சிக்கலின் முழுமையை உணர முடியும்.

பண்டைத் தமிழகத்தில் காவிரி ஆறு சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. காவிரியாற்றின் வளமையால் தஞ்சைப் பகுதி நெல் விளையும் களமாகத் திகழ்ந்து 'நெற்களஞ்சியம்' என்னும் சிறப்பைப் பெற்றது. இத்தகைய வளமுடைய நாட்டைப் பெற்றிருந்ததாலேயே சோழர்கள் 'வளவன்' என்ற அடைபெயரையும் 'சோழ வளநாடு சோறுடைத்து' என்ற பெருமை மொழியையும் பெற்றிருந்தது. இத்தகு வளமை பொருந்திய காவிரியாற்றின் சிறப்பை,

> "வான் பொய்ப்பினும் தான் பொய்யா
> மலைத் தலைய கடற்காவிரி புனல்
> பரந்து பொன் கொழிக்கும்........."

என பட்டினப்பாலைப் பாடலின் வரிகள் எடுத்துரைக்கின்றன. அதனால் பண்டைத் தமிழ் மக்கள், "மழைத் துளிகளை மட்டுமே உணவாக உட்கொள்ளும் வானம்பாடிப் பறவைகள் வருந்தும்படி மழைபொழியாது வானம் பொய்த்தாலும்

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

பொய்க்கலாம். ஆனால் தமிழ்நாட்டில் காவிரி பாய்வதானது என்றும் பொய்க்கவே பொய்க்காது'' என்று நம்பிக்கையோடு வாழ்ந்திருந்தனர். அதனையே அந்தப் பட்டினப்பாலைப் பாடல் விளக்குகின்றது.

ஆனால் அந்த நம்பிக்கை இன்றைய தமிழ் மக்களிடையே தகர்த்தெறியப்பட்டு விட்டது. ஆம்! தமிழகத்திற்குள் காவிரியாறு பாய்வது தடுக்கப்பட்டுத் தஞ்சைப் பகுதி பாலை நிலமாக உருமாறிக் கொண்டு வருகின்றது. இதனால் தஞ்சை மாவட்ட உழவர்களின் வாழ்க்கை உருக்குலைந்து கொண்டு வருகின்றது. அதற்கு இந்தி(ய)த் தில்லி வல்லரசின் ஆளுமை வெறி நடுநிலைப் போக்கும், கருநாடக மாநில அரசின் கரவான இனவெறித் திமிர்த்தனமும், தமிழகப் பாதந்தாங்கிகளின் கையாலாகாத நிலையுமே கரணியங்களாகும். இப்படி ஆளும் வெறியர்களால் நம்பிக்கை தகர்க்கப்பட்ட நிலையில்தான் தஞ்சை மாவட்ட உழைக்கும் மக்கள் வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். தமிழகத்திற்குரிய காவிரி நீரை முறையற்ற வழிகளில் கருநாடக அரசு பயன்படுத்தி வருவதே இச்சிக்கலின் அடிப்படையாகும்.

இக்காவிரி நீர் உரிமைச் சிக்கல் ஏதோ நேற்று தோன்றி இன்று தொடர்வதன்று; அது பண்டை மன்னராட்சிக் காலம் தொட்டுத் தற்கால மக்களாட்சிக் காலத்திலும் தொடர்ந்து வரும் சிக்கலாகும். எனவேதான் இச் சிக்கலுக்கு நெடிய வரலாறு உண்டு; அதில் குறிப்பிடத்தக்க சில நிகழ்வுகளும் உண்டு.

கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் கருநாடகத்தை ஆண்ட முதலாம் நரசிம்மன் காவிரி ஆறு தமிழகத்திற்குள் பாய்வதைத் தடுக்கப் பல செயற்கை மலைகளை ஆற்றின் குறுக்கே கட்டுவித்தான். அவற்றை அன்றைய தமிழ் மன்னன் சோழன் இராசராசன் படைதிரட்டிச் சென்று உடைத்தெறிந்து மீண்டும் தமிழகத்திற்குள் காவிரியாற்றைக் கொணர்ந்தான். (தொடரும்)

அமெரிக்காவில் தேர்தல் உறுதி!

இரு நூறு ஆண்டுக் காலமாக சியார்சு-வாசிங்டன் தேர்தல் முதல், குறிப்பிட்ட நாளில் தேர்தல்கள் அமெரிக்காவில் நடைபெறுகின்றன. 'லீப்' ஆண்டில் நவம்பர் மாதம் முதல் திங்களைத் தொடர்ந்து வரும் செவ்வாயன்று தேர்தல்கள் நடந்தேயாக வேண்டும் என்ற அரசியல் சட்ட நெறியை இதுவரை எவரும் மீறத் துணியவில்லை. மழையானாலும், உறைபனியானாலும் குறித்த நாளில் தேர்தல்கள் நாடு முழுவதும் நடைபெறுகின்றன.

அமைச்சர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

தி.மு.க. அமைச்சர்கள் சிலர் திடும் திடுமென மருத்துவமனைகளிலும் உணவுப் பங்கீட்டுக் கடைகளிலும் நுழைந்து ஆய்வு செய்வது நல்லதுதான்! ஆனால் ஆய்வுக்குப் பின்னுவது அந்நிறுவனங்கள் சரியாக நடைபெறுகின்றனவா என்பதையும் கண்காணிக்க வேண்டும். அதையும் செய்வார்களா?

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தாய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 35

ஒரு செயலை வரையறுத்தால் போதாது; அது தொடர்ந்து செயல்படுகிறதா என்றும் கண்காணித்தல் வேண்டும்.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 118;

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண். 847829;
உறுப்பினர்:

தனி இதழ் விலை	உரு. 1-00
ஆண்டுக் கட்டணம்	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS (C) 657